**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**S.T.C.No.1987/2025**

**Prosecution Witness : 4**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : அருண்பிரசாத் | **Caste** | : | |
| **Father's Name** | : அணி ராஜ் | **Calling** | : | நகர் மேற்கு காவல் நிலையம், திண்டுக்கல் |
| **Village** | : கடலாடி | **Religion** | : | |
| **Taluk** | : ராமநாதபுரம் | **Age** | : | 32 |
| | | **Dated** | : | **20.07.2026** |

**20.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 **திரு.சையது அன்வர் சாதீக்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.4** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது நகர் மேற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சார்வு ஆய்வாளர் ராமபண்டி என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சையம் என்பதால் ஆவணங்களிடன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கேிற்ன.

கடந்த 02.10.2024ம் தேதி 15.00 மணிக்கு நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த ராமபாண்டியன் வழக்கினை விசாரணைக்கு எடுக்குக்கொண்டு சாட்சிகள் மகேஸ்வரன், இளங்கோவன், சையது அன்வர் சாதீக், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். நிலையத்தில் ஆஜரில் இருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணயல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு பணிமாறுதல் காரணமாக சென்று விட்டதால் வழக்கினை புலன் விசாரணகைக்கு எடுத்துக்கொண்ட நான் பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரை விசாரித்த சார்பு ஆய்வாளர் ராமபாண்டியனிடம் சொன்ன சங்கதிகளையே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பதிவு 91 மூலம் வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து R.P.R.106/2024 ஆக பதிவு செய்தேன். பின்பு எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 4(1)(c) TNP Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல செய்தேன். **அத்தாச்சி அ.சா.ஆ.4 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அத்தாச்சியில் சாக்குபையை கைப்பற்றிவில்லை என்றால், சரிதான். சம்பவம் தொடர்பாக மாதிரி வரைப்படம், பார்வை மகஜர் போன்ற ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றால், சரிதான். சம்பவ இட தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால், சரிதான், அங்கு யாரும் இல்லை. அங்கு கைப்பற்றி 11 பாட்டிகளில் டாஸ்மார்க் லேபில் ஒட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி பாட்டில் எந்த கடையில் வாங்கப்பட்டது என்றும், அது எங்கு கொள்முதல் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால், சரிதான்.

அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் அனைவரும் எனது காவல் நிலையத்தில், எனக்கு கீழே பணிபுரியும் காவலர்கள் என்றால், சரிதான். சம்பவ இடமானது பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால், சரிதான். சம்பவ இடத்தில் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரியை சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து எந்த வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. அத்தாச்சியை காவல் நிலையத்தில் தயார் செய்து காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல. புள்ளிவிவற கணக்கிற்காக இவ்வழக்கை மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**
இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.07.20 17:29:12 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**S.T.C.No.1987/2025**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : சையது அன்வர் சாதீக் | **Caste** | : | |
| **Father's Name** | : சையது தாவூத் | **Calling** | : | தலைமைக்காவலர், தாடிக்கொம்பு காவல் நிலையம் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | 56 |
| | | **Dated** | : | **20.07.2026** |

**20.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–3 **திரு.சையது அன்வர் சாதீக்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2024ம் தேதி 15.00 மணிக்கு நகர் வடக்கு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் மகேஸ்வரன், சிறப்பு சார்பு ஆய்வார் இளங்கோவன், ஆகியோர்களுடன் சரக எல்லையில் குற்ற தடுப்பு சம்மந்தமாகவும், மது விலக்கு சம்மந்தமாகவும், ரோந்து செய்து கண்காணித்து திண்டுக்கல் AMC Road, ஆனந்த் பொரி கடை அருகே சென்றபோது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த வீரகாலிமுத்து

**என்பவர் வெள்ளை சாக்கு பையை வைத்திருந்தவர் எங்கள் போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் ஓட எத்தணித்தவரை மடக்கி பிடித்து விசாரித்த போது அரசு அனுமதி இல்லாமல் அரசு மது பான பாட்டில்களை தனது சுயலாபம் கருதி சில்லரை விற்பணைக்காக வைத்திருந்ததை** 180ml Golden choice 11 **பாட்டில்களை வைத்திருந்தவரை காரணம் கூறி கைது செய்து அத்தாச்சியில் கைப்பற்றி, தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் அத்தாச்சியில்** 15.15 **மணிக்கு கைப்பற்றினோம். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து** 15.30 **மணிக்கு குற்ற எண்.**1037/2024, **சட்டப்பிரிவு** 4(1)(c) TNP Act**ன் கீழ் வழக்கு பதிவு செய்தும், திரேக பரிசோதனை செய்து பரா வசம் ஒப்படைக்க உதவியாக இருந்தேன்.** புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாச்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அத்தாச்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடமானது பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால், சரிதான். சம்பவ இடத்தில் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சாக்குப்பையை அத்தாச்சியில் கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல, கைப்பற்றினோம். என்னிடம் காட்டப்படும் அத்தாச்சியில் சாக்குப்பையை கைப்பற்றியதாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. அத்தாச்சியை காவல் நிலையத்தில் தயார் செய்து காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல. புள்ளிவிவற கணக்கிற்காக இவ்வழக்கை மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.20 17:29:17 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**S.T.C.No.1987/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : இளங்கோவன் | **Caste** | : | |
| **Father's Name** | : மூர்த்தி | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| **Village** | : கும்பம்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | 60 |
| | | **Dated** | : | **20.07.2026** |

**20.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திரு.இளங்கோவன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது காவல் துறையில் இருந்து ஓய்வு பெற்று, கும்மாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் திண்டுக்கல் நகர் வடக்கு சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 02.10.2024ம் தேதி 15.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் மகேஸ்வரன் அவர்களிடம் நான், தலைமைக்காவலர் 1315, சையது அன்வர் சாதிக் ஆகியோர் சரக எல்லையில் குற்ற தடுப்பு சம்மந்தமாகவும், மது விலக்கு சம்மந்தமாகவும், ரோந்து செய்து கண்காணித்து திண்டுக்கல் AMC Road, ஆனந்த் பொரி கடை அருகே சென்றபோது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த வீரகாலிமுத்து என்பவர் வெள்ளை சாக்கு பையை வைத்திருந்தவர் எங்கள்

போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் ஓட எத்தணித்தவரை மடக்கி பிடித்து விசாரித்த போது அரசு அனுமதி இல்லாமல் அரசு மது பான பாட்டில்களை தனது சுயலாபம் கருதி சில்லரை விற்பனைக்காக வைத்திருந்ததை 180ml Golden choice 11 பாட்டில்களை வைத்திருந்தவரை காரணம் கூறி கைது செய்து அத்தாச்சியில் கைப்பற்றி, தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் அத்தாச்சியில் 15.15 மணிக்கு கைப்பற்றினோம். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து 15.30 மணிக்கு குற்ற எண்.1037/2024, சட்டப்பிரிவு 4(1)(c) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்தும், திரேக பரிசோதனை செய்து பரா வசம் ஒப்படைக்க உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாச்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அத்தாச்சியில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடமானது பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால், சரிதான். சம்பவ இடத்தில் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சாக்குப்பையை அத்தாச்சியில் கைப்பற்றவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. அத்தாச்சியை காவல் நிலையத்தில் தயார் செய்து காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல. புள்ளிவிவற கணக்கிற்காக இவ்வழக்கை மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.20 17:29:24 +0530

Judicial Magistrate No.II

Dindigul.